கால்நடை வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டிவருகிறது. ஆகையால் இந்தத் திட்டத்தைக் கரூர் பகுதியிலே விஸ்தரிப்பதற்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

DR. H. V. HANDE : May I know whether this Intensive Cattle Development Programme has given adequate results in any other centre?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இதற்கு வேண்டிய ஆராய்ச்சிகளெல்லாம் நடைபெறுகின்றன. அறுபது சத விகிதம் வெற்றி கிடைத்திருக்கிறது.

அரசியல் தியாகிகள்

* 33 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :
திரு. ஆ. கு. சுப்பையா :
திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி :
திரு. சோ. அழகர்சாமி :
புலவர் பொ. பொன்னம்பலம் :
திரு. க. இராமமூர்த்தி :
} மதிப்பிற்குரிய

முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசியல் தியாகிகளுக்குப் பென்ஷன் கொடுக்கும் விஷயம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களுக்கு உதவித்தொகை (Pension) வழங்கும் திட்டம் ஒன்று 1966, அக்டோபரில் கொண்டுவரப் பட்டது. மேற்படி உதவித் தொகை, அதற்கென வகுக்கப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை வழங்கக் கோரி, விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களிடமிருந்தோ அவர்களது விதவைகள் அல்லது உரிய வயதடையாத பிள்ளைகளிடமிருந்தோ 1967-ம் வருடம் மார்ச்சு மாதம் 15-ம் தேதிவரை 5,206 விண்ணப்பங்கள் வந்தன. அவை குறித்து சம்பந்தப்பட்ட தாசில்தார்கள் மூலமாக அவசியமான விசாரணைகளை நடத்தும்பொருட்டு மேற்படி விண்ணப்பங்கள் அந்தந்தக் கலெக்டர்களுக்கு அனுப்பப்படுகின்றன. 1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ந் தேதி வரை கலெக்டர்களிடம் முடிவுறாமல் நின்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 4,281; 872 விண்ணப் பங்கள் குறித்து அறிக்கைகள் பெறப்பட்டன.

உதவித்தொகை வழங்கக் தக்க தகுதி குறித்து, கலெக்டர்களின் பரிவுரைகள் ஆராயப்பட்டு, தகுதியுடையவர்களுக்கு உதவித் தொகை அளிக்க ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது. 1967-ம் வருடம் மார்ச்சு மாதம் 21-ந் தேதி வரை 35 பேருக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது ; 225 விண்ணப்பங்கள் நிராகரிக்கப் பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 34 ஆவது எண்ணுள்ள கேள்விக்கும் மாண்புமிகு முதல் அமைச்சர் பதில் அளித்துவிட்ட பிறகு இரண்டு வினாக்களுக்கும் சேர்த்து துணை வினாக்கள் அனுமதிக்கலாம் என்று கருதுகிறேன்.

***34. வினா.—திரு. ஆ. கு. சுப்பையா :**
திரு. சோ. அழகர்சாமி : } மதிப்பிற்குரிய
திரு. வி. கே. கோதண்டராமன் :

முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்டவர்கள் எத்தனை நபர்களுக்குப் பென்ஷன் வழங்க உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது ?

(இ) மொத்தம் பரிசீலிக்கப்பட்ட மனுக்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) 95.

(இ) 327.

திரு. என். எஸ். வி. சித்தன் : சட்டப் பேரவைத்தலைவர் அவர்களே, இந்தப் பென்ஷன் அளிக்கும் திட்டத்தில் வேண்டுமென்றே காலதாமதம் செய்வதாக ஒரு எண்ணம் மக்களிடையே இருக்கிறது. ஆகவே, பென்ஷனைத் துரிதமாக வழங்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தியாகிகளுக்கு மான்யம் வழங்கும் திட்டத்தைக் கொண்டுவந்தவர்களே கால தாமதம் காட்டுகிறார்கள் என்று உறுப்பினர் சொல்வதைப்பற்றி நான் வியப்படைகிறேன்.

திரு. அ. பொ. அரசு : அரசியல் தியாகிகளுக்கு ஒதுக்கப் பட்டுள்ள நிலங்களை விற்பதற்கோ அல்லது குத்தகைக்கு விடுவதற்கோ அனுமதி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இது பென்ஷன் தருவதைப் பற்றிய கேள்வி. குத்தகை பற்றித் தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. ஏ. பாலசுப்பிரமணியன் : மன்றத் தலைவர் அவர்களே, ஆட்சிக்கு வந்து ஏறத்தாழ 19 ஆண்டுகளுக்குப் பின்னால்தான் அதாவது அக்டோபர் 1966-ல் ஏற்கனவே இருந்த ஆட்சியாளர்கள் இதைக் கொண்டு வந்தார்கள். ஏன் இவ்வளவு தாமதித்துக் கொண்டு வந்தார்கள் ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தியாகத்தைப்பற்றி விளக்கம் கூறுவதற்கு அவ்வளவு வருடங்கள் பிடித்தன என்று கருதுகிறேன்.